1972 டிசம்பர் 14]

Leprosy Centre, Tiruchengode

* 168 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is given by the Government to the Leprosy Centre at Gandhi Ashram at Tiruchengode during recent years; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

ஈரோடு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பால்

* 169. வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 ஜூன் மாத மத்தியில் ஈரோடு அரசு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பாலைக் குடித்ததால் 100-க்கும் அதிகமானவர்கள் வாந்தியெடுத்தது உண்மையா?

(இ) கெட்டுப்போன பாலை வழங்கியவர் பேரில் நடவடிக்கை எதும் எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) 1—6—1972-ம் நாளிலிருந்து இந்த மருத்துவ மனைக்கு ஈரோடு கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் பால் வழங்குகிறது. அதற்குமுன் இரண்டு திங்கள் தனிப்பட்ட குத்தகைக்காரர் ஒருவரால் பால் வழங்கப்பட்டு வந்தது. 1—6—72-ம் நாளிலிருந்து மருத்துவ மனைக்குப் பால் அவர் வழங்கா விட்டாலும், மருத்துவ மனைக்கு வேண்டிய கீரைகள், காய்கறிகள், விறகு போன்றவைகளைக் குத்தகையின் அடிப்படையில் அவர்தான் வழங்கி வருகிறார். 11—6—72-ம் நாள் ஈரோடு பால் வழங்கு ஒன்றியம் வழங்கிய பாலைக் காய்ச்சி நோயாளிகளுக்குக் கொடுத்ததில் அவர்களில் 102 பேர் வாந்தி எடுத்தனர். உடனே அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் குணமடைந்து மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டுவிட்டனர். இச்சம்பவத்தினுல் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. ஆயினும், கீரைகள், காய்கறிகள் போன்றவைகளை வழங்கும் குத்தகைக்காரர் மீதும் சம்பவத்தன்று பாலைக் காய்ச்சிய மருத்துவ மனை சமையற்காரர் மீதும் ஐயம் எற்பட்டு காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அத்துறையினர் இது குறித்து புலன் ஆய்வு செய்து வருகின்றனர். அத்துறையின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி விடுதிகளில் தாப்படும், பால், உணவு, போன்றவைகளால் பல நேரங்களில் இப்படி அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. கூடுமானவரையில், இவைகளை நல்லவகையில் பரிசோதனை செய்து, அதற்குப் பிறகு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒருவர் தருகிற பாலாக இருந்தாலும் கூட அதுபற்றி ஐயம் அதிகமாக எழ இடம் இருக்கிறது. இது கூட்டுறவுப் பால் வழங்கு ஒன்றியத்திலுல் வழங்கப்பட்டது. இந்தப் பால் வேறு சில மருத்துவ மனைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே யாரும் வாந்தி எடுக்கவில்லை. இங்கே மட்டும் இந்நிலை ஏற்பட்டதற்கு அவர்கள் உண்ட வேறு உணவு காரணமாக இருக்கக் கூடும் என்றும் கூடக் கருதப்படுகிறது. சாதாரணமாக, பால் வழங்குகிறபொழுது, சமையல்காரர்கள் ஒரு குவளை குடிக்கக் கூடும். ஆனால், இந்தக் குறிப்பிட்ட சமையல்காரர் தான் மட்டும் குடிக்காமல், மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே, அதிலே சில ஐயத்திற்கு இடமான சூழ்நிலைகள் இருப்பதால், அதுபற்றி போலீஸ் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தப் பாலைக் காய்ச்சும்பொழுது ஏதோ விஷப் பூச்சி விழுந்ததாகவும், அதை எடுத்துவிட்டு பரிமாறியதாகவும் கேள்விப்பட்டேன். அதைப்பற்றி அரசு ஆராய்ந்ததா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது தவறி விழுந்ததா என்பதும் தெரிய வில்லை, அப்படி விழுந்ததாக ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. ஆனால், சமையல் காரருக்கு, ஏற்கனவே பால் வழங்கிய பால்காரரோடு மிக நெருங்கியத் தொடர்பு இருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. இந்த ஆண்டு பால் வழங்கும் பொறுப்பு கூட்டுறவு ஒன்றியத்திற்குக் கொடுக்கப்பட்டதால், இந்த சமையல்காரர் ஏதாவது தவறு செய்திருக்கக் கூடும் என்ற ஐயத்திற்கு இட மிருக்கிறது. ஏனென்றால், பால் காய்ச்சிய சமையல்காரர் தவிர, மற்ற சமையல் காரர்களெல்லாம் பால் சாப்பிட்டதாகத் தெரிகிறது. அவர் மட்டும் சாப்பிடவில்லை. எனவே, ஐயத்திற்கு இடமிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவ மனை களில் பால், பழம் போன்றவற்றைக் கொடுக்கின்ற குத்தகைகாரர்கள், லாப நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தாமில்லாத பொருள்களாகக் கொடுக் கிறார்கள். அதை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, குத்தகைக்காரர்கள் தவறு செய்யக் கூடிய நிலைமைக்கு ஏதாவது ஒரு காரணம் இருக்குமானுல், அது அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய பொறுப்பிலேயுள்ள பணியாளர்கள் பொறுப்

1972 டிசம்பர் 14]

புணர்ச்சி இழந்திருப்பதுதான். அப்படி இருப்பவர்கள் எளிய சாதாரண நிலையிலிருப்பதால், அவர்கள்மீது அந்தக் குற்றச்சாட்டை வைத்து நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. அவ்வப்போது சென்று பார்வையிட்டு, ஒவ்வொரு பொறுப்பிலும் குறைகள் இருந்தால், சுட்டிக்காட்டுவதற்கு அந்த இலாக்காவில் அதற்கென்றே தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்பார்வைச் செலவு பொது மக்களுக்கு ஆகின்ற பணிச் செலவை நோக்க மிகக் குறைவாகவே இருக்கவேண்டும். அதிகம் ஆகக் கூடாது என்ற காரணத்தினுல் அதை அதிகமாக்க முடியவில்லை. மேற்பார்வைக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன் : மருத்துவ மனைகளுக்கு வழங்குகின்ற பாலையும் மற்ற உணவுப் பொருள்களையும் முன்னதாகவே பரிசோதிக்க மருத்துவர்கள் இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உள்ளபடியே பால் தரமான பாலா என்று சோதிக்கப்படுகிறது. ஸ்பெசிபிக் கிராவிட்டி, அடர்த்தி பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் பாலைப் பார்த்தாலே அதன் தரம்பற்றித் தெரியும். சந்தேகம் ஏற்பட்டால் பரிசோதிக்க முடியும். மருத்துவ மனைகளில் கொடுக்கப்படும் பாலே கெட்டதாக இருந்தால், பிறகு மக்கள் பாலும் சாப்பிட முடியாது, மோரும் சாப்பிட முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் பரிசோதிக்க முடியாது. மனிதனே ஒரு பரிசோதனைச் சாலையாக இருக்கிருன், இந்தப் பரிசோதனையிலே அவன் வெற்றி பெறுவான் என்று கருதுகிறேன்.

இராணிப்பேட்டையில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்குக் கட்டடம்

*170. வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்காக இராணிப்பேட்டையில் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீட்டு தொகை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ரூ. 15 இலட்சம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும் ? அது முடிவடைந்தால், அங்கே கால்நடை மருத்துவ ஆராய்ச்சியை எப்பொழுது ஆரம்பிக்கத் திட்டமிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.